DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.44/2025**
Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்வகணபதி | | : |
| த/பெ | : சாமிநாதன் | மதம் | : |
| கிராமம் | : ஆவடி | தொழில் | : ஓட்டுநர் |
| வட்டம் | : சென்னை | வயது | : 59/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 08.05.2026**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>: PW1**

புகார் மனுவில் எதிரிக்கு பணம் நட்பு ரீதியாக தான் கொடுத்தேன் என்றும் வட்டிக்கு தரவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான், சொத்து பத்திரம் வாங்கி கடன் கொடுத்தேன். வழக்கு காசோலை 2ம் முறை வங்கியில் செலுத்தியபோது எதன் மூலம் எதிரிக்கு தகவல் தெரிவித்தேன் என்றால் போன் மூலம் தகவல் தெரிவித்தேன். காசோலை செலுத்திய அன்று போன் செய்யவில்லை, அதற்கு முன்பாக போன் செய்து காசோலை செலுத்தப்போவதாக தெரிவித்தேன். எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு எதிரி முகவரியில் இல்லை என்று திருப்பப்பட்டது என்றால் சரிதான். எதிரி வேலை செய்யும் முகவரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் அதிலும் எதிரி கையெழுத்து செய்து பெறவில்லை என்றால் யார் கையெழுத்து செய்தார் என்று தெரியாது, ஆனால் பெற்றுக்கொண்டார். வழக்கறிஞர் அறிவிப்பு வேலை செய்யும் இடத்தில் வேறு யாரோ வாங்கிக்கொண்டு எதிரிக்கு தகவல் தரவில்லை என்றால் அது குறித்து தெரியாது. எதிரி காசோலை மட்டும் தான் கொடுத்தார் கடன்

உறுதி சீட்டு எதுவும் தரவில்லை என்றால் சரிதான். மோகன் என்பவர் நான் சொன்னதின் பேரில் தான் எதிரிக்கு பணம் கொடுத்தார் என்றால் சரிதான். 2022 ஆம் ஆண்டு வருமான வரி செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான், அந்த ஆவணம் தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். 2022 ஆம் ஆண்டு ரூ.2,00,000/- எதிரி கடன் வாங்கிய போது பாதுகாப்பிற்காக இவ்வழக்கு காசோலை கொடுத்தார் என்றும் 4 ஆண்டுக்கு பின்பு காசோலையை நானாகவே பூர்த்தி செய்து வங்கியில் செலுத்தினேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு எந்த பணமும் தரவேண்டிய பாக்கி இல்லை முழுவதும் செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K